# தன்னார்வ அமைப்புகள் குறித்த தமிழக அரசின் கொள்கை – 2010

## 1. முகப்புரை

1.1 மத்திய அரசின் திட்டக்குழு தன்னார்வ அமைப்புகள் குறித்த தேசியக் கொள்கையை உருவாக்கியள்ளது. மத்திய அமைச்சரவைக் குழுவும் இக்கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கொள்கை, இந்திய மக்களின் சமூக, கலாச்சார பொருளாதார முனனேற்த்திற்காக, தன்னார்வக்குழுக்கள் சுதந்திரமாகவும், பல்வேறு தளங்களில் புதிய செயல்பாடுகளை மேற்கொள்ளவும ஊக்கப்படுத்தும்வகையில் அமைந்துள்ளது.

1.2 தமிழக அரசும் தன்னார்வக் குழுக்களுக்கான தேசியக் கொள்கையை ஏற்று அதனடிப்படையில் தனது கொள்கையை அறிவிக்கிறது. இக்கொள்கை, பல்வேறு தளங்களில் தன்னார்வத் துறையினர் ஆற்றும் பணியை அங்கீகரிக்கிறது.. தற்போதைய சூழலில், சாதாரண மக்களின் நலனுக்காக தன்னார்வக் குழுக்களும் அரசும் ஒருங்கிணைந்து பல்வேறு தளங்களில் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது என்பதையும் தமிழக அரசு அங்கீகரிக்கிறது.

## 2. கொள்கையின் வீச்சு

2.1 இக் கொள்கையில் குறிப்பிடப்படும் தன்னார்வ அமைப்புகள் அல்லது சமூக அமைப்புகள் (CSOs) என்பன மக்கள் நலனுக்காகவும், முன்னேற்த்திற்காகவும் பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், கொள்கை ஆய்வுக் குழுக்கள், ஆதரித்து வழக்காடல் மற்றும் இயக்கம் சார்ந்த அமைப்புகள், வள ஆதார மையங்கள் மற்றும் ஆய்வு மையங்கள், கூட்டமைப்புகள், வலைத்தளங்கள், சிறு கடன் மற்றும் நுண் கடன் வழங்கும் நிறுவனங்கள் என வரையறுக்கப் படுகிறது.

2.2 இக்கொள்கைப்படி, இலாபம் சாராத முறையில் செயல்படும் தனியார் நிறுவனங்களும் தன்னார்வ அமைப்புகளும் அடங்கும். முறையான பதிவு பெற்றோ அல்லது பதிவு பெறாமலோ விளிம்புநிலை மக்களின் நலனுக்காகச் சுயாட்சி முறையில் செயல்படும் அனைத்து அமைப்புகளும் தன்னார்வ அமைப்புகள் / சமூக அமைப்புகள் என்ற வரையறைக்குள் அடங்கும். தமிழ்நாடு அரசின் இக்கொள்கை அமைப்புகளை அங்கீகரிக்கிறது.

## 3. நோக்கங்கள்

3.1 தமிழ்நாடு அரசின் தன்னார்வ அமைப்புகளுக்கான கொள்கைத் திட்டததின் நோக்கங்கள்

3.1.1 தன்னார்வக் குழுக்களின் தன்னாட்சி முறையை பாதுகாக்கும் வகையிலும், புதிய அணுகுமுறைகளையும், செயல்பாடுகளையும் ஊக்கப்படுத்தும் வகையிலும் உகந்த சூழலை உருவாக்குதல்

3.1.2 சமூக வளர்ச்சிக்கான தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகளை பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் ஆதரித்தல்

3.1.3 பரஸ்பர நம்பிக்கை மற்றும் மதிப்பின் அடிப்படையில் மக்களின் மேம்பாட்டிற்காக தன்னார்வக் குழுக்களை அரசு சம பங்காளர்களாக பாவித்து பொறுப்புகளை பகிர்ந்தளிக்கும்.

3.1.4 தன்னார்வக் குழுக்களின் சுயாட்சி முறையை தமிழக அரசு அங்கீகரிக்கிறது. அதன் மூலம் தன்னார்வ அமைப்புகளின் ஆட்சி முறையை பலப்படுத்தும் வகையில் பொறுப்புணர்வையும், வெளிப்படைத் தன்மையையும் ஊக்கப் படுத்துகிறது. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கான சில வழிவகைகளும் கீழே தரப்படுகின்றன.

## 4 தன்னார்வ அமைப்புகளுக்கான ஏதுவான சூழலை உருவாக்குதல்

4.1 தன்னார்வ அமைப்புகளின் தன்னாட்சி முறையை பாதுகாக்கும் அதே வேளையில் தன்னார்வக் குழுக்களின் சுயமான நெறிப்படுத்து முறைகளையும், பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையிலும் அரசு சட்டங்கள், கொள்கைகள், விதிமுறைகள் மற்றும் நடத்தை நெறிகளை உருவாக்கும்.

4.2 தற்போது நடைமுறையில் இருந்து வரும் சங்கப் பதிவுச் சட்டம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, தன்னார்வக்குழுவின் தன்னாட்சி முறையை பலப்படுத்தும் வகையில் எளிமைப் படுத்தப்படும். தேசிய திட்டக்குழுவின் வரைமுறைப்படி, தமிழக அரசும் திட்டக்குழுவில் தன்னார்வ செயல்பாட்டுக்கான தனிப்பிரிவை உருவாக்கும். இந்தத் தனிப்பிரிவு அரசுக்கும் தன்னார்வ அமைப்புகளுக்கும் இடையே பரஸ்பர உறவை மேம்படுத்தும்.

4.3 தன்னார்வ அமைப்புகள் சுய ஆளுமை, பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகிய பண்புகளை முறையாகக் கைக்கொள்ளும். அரசு தன்னார்வ அமைப்புகளை இத்தகைய வழியில் செயல்பட வழிகாட்டும்.

## 5. வளர்ச்சியில் பங்காளர்கள் ( நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி)

5.1 தன்னார்வ அமைப்புகள் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன என்பதை அரசு அங்கீகரிக்கிறது. அதிலும் முக்கியமாக வளர்ச்சித் திட்டங்களில் அடித்தள மக்களின் பங்கேற்பை உறுதிப் படுத்தும். வழிகாட்டிகளாக தன்னார்வ அமைப்புகள் செயல்படுகின்றன. மாற்றுப் பார்வை, சிறப்பான செயல்பாடு, புதிய அணுகுமுறைகள், அடித்தள பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளை புரிந்து கொள்ளும் தன்மை மற்றும் அடித்தள மக்களோடு அர்த்தம் செறிந்த விவாதங்களை மேற்கொள்ளும் திறமை ஆகியவை தன்னார்வ அமைப்புகளின் சிறப்புகளாகும். எனவே அரசும் தன்னார்வ அமைப்புகளும் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியமாகும். சாத்தியமான இடங்களில் பஞ்சாயத்து அமைப்புகள், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, கல்வி நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களோடும் இணைந்து செயல்பட வேண்டும்.

5.2 அரசுக்கும் தன்னார்வ அமைப்புகளுக்கும் இடையேயான கூட்டுப் பங்காண்மையில் பொதுவான இலக்கை அடைய இருவரும் இணைந்து முழுமையாக்குகிற

பணிகளைச் செய்ய வேண்டும். இதற்கு ஏதுவாக பரஸ்பர நம்பிக்கையும், பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புகளும் அதிகாரமும் மிகவும் அவசியம். கூட்டு உரிமையை வெளிப்படுத்தும் வகையில் கூட்டு பங்காண்மையின் ஒப்பந்த விதிகள் அமைய வேண்டும்.

5.3 கூட்டுப் பங்காண்மையின் முக்கிய மூன்று அம்சங்களை அரசுக் கொள்கை அங்கீகரிக்கிறது. அவையாவன :

அ. .அடித்தட்டிலும், பரந்த அளவிலும் பங்கேற்பு முறையிலான ஆலோசனைகளைப் பெறுதல்

ஆ. சமூக நீதியை உறுதிப் படுத்த, திட்டமிட்ட நிலையான சமூகத்தை திரட்டுதல்

இ. தன்னார்வக் குழுக்கள் மூலமாக சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக நிதி உதவி அளித்தல்

5.4 கூட்டு ஆலோசனை குழுக்கள்/ மன்றங்கள், அல்லது அரசும், தன்னார்வக் குழுக்களின் பிரதிநிதிகள் இணைந்த கூட்டுக் குழுக்கள் ஆகியவை நிறுவப்படும். இந்தக் குழுக்களில் பெண்கள், மாற்றுத் திறனுடையோர், மூன்றாம் பாலினத்தவர், தலித்துகள், ஆதிவாசிகள், மீனவர்கள் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ளோர் ஆகியோர் பிரதிநிதித்துவம் பெறுவர். இத்தகைய கூட்டு ஆலோசனைக் குழுக்களில் தன்னார்வ அமைப்புகள் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படுவர். இத்தெரிவு முறையில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட திட்டக் குழுக்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி நிர்வாகம், பஞ்சாயத்து அமைப்புகள் பங்கேற்கும். கூட்டு ஆலோசனைக் குழுக்களில் பரந்துபட்ட அளவில் அனைத்து மக்கள் பிரதிநிதித்துவம் இடம் பெறும் வகையில் செயல்முறைகள் உருவாக்கப்படும்.

.

5.5 தன்னார்வக் குழுக்களின் தனித்திறமைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அரசின் குழுக்கள், ஆலோசனைக் குழுக்கள் மற்றும் உடனடி நடவடிக்கைக் குழுக்களில் தன்னார்வக் குழுக்களின் பிரதிநிதிகள் அவ்வப்போது செயல்பட கோரப்படுவர். இதற்கொன மாநில அளவில் பல்வேறு துறைகளில் தன்னார்வ அமைப்புகளின் மூலம் ஆலோசனை வழங்குவோர் பட்டியல் தயாரிக்கப்படும். இவற்றை தன்னார்வ அமைப்புகள் அரசுடன் பகிர்ந்து கொள்ளும்.

5.6 வறுமை ஒழிப்பு, திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் பயிற்சி, பெண்கள் மேம்பாடு, மக்கள் தொகை கட்டுப்பாடு, உடல்நலத் திட்டங்கள், தொழிலாளர் உரிமைகள், கொத்தடிமை, குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, எச்.ஐ.வி./ எய்ட்ஸ் கட்டுப்பாடு, நீராதாரங்களைப் பாதுகாத்தல், அரசுக் கொள்கைகள், நலத் திட்டங்கள் பற்றிய விவாதங்களை மக்களிடையே கொண்டு செல்லுதல், ஆரம்பக் கல்வி, காடுகளை நிர்வகித்தல், பாலினம் சார்ந்த பிரச்சினைகளை எதிர் கொள்ளுதல், மாற்றுத் திறனுடையோர், ஆதரவற்றோர் ஆகியோருக்காக செயல்படுதல் போன்ற செயல்பாடுகளில் தொடர்ந்து மக்களை திரட்டுவதற்கு தன்னார்வக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். அத்தகைய செயல்பாடுகளில் இலக்கை அடைய அரசுக்கும் தன்னார்வக் குழுக்களுக்கும் இடையே நீண்டகால பல்முனைப்பான, புதிய அணுகுமுறைகளைக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உடனடியாகத் தேவைப்படுகிறது.

5.7 கூட்டுப் பங்காணமையின் மூன்றாவது அம்சம் நிதி உதவி. சுய உதவிக் குழுககள், ஆய்வுகள், கணக்கெடுப்புகள், பயிற்சிப் பட்டறைகள், ஆவணப்படுத்துதல், விழிப்புணர்வு கூட்டங்கள், பயிற்சிகள், பொது நலனுக்கான சிறு செயல்பாடுகள் எனப் பலவகை திட்டங்கள் நிதி உதவிக்குள் அடங்கும். அரசின் இத்தகைய திட்ட ஒதுக்கீடுகள், தன்னார்வக் குழுக்களின் பங்கேற்போடு அரசின் நலத் திட்டங்களை செயல்படுத்த உதவும்.

## 6. தன்னார்வக் குழுக்களை பலப்படுத்துதல்

6.1 அரசின் நலத் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் தன்னார்வக் குழுக்கள் தங்களது பங்கேற்பை உறுதிப் படுத்த தலையீடு செய்வதற்கு ஏதுவான, எளிய வழிமுறைகள் அரசுத்துறைகளில் உருவாக்கப்படும். தன்னார்வக் குழுக்கள் மீது விதிக்கப்படும் விற்பனை வரி போன்ற வரிகளை விலக்குவதற்கு வழிவகைகள் உள்ளதா என்பதும் பரிசீலிக்கப்படும். தன்னார்வக் குழுக்களின் மின்சார பயன்பாட்டிற்கான கட்டணம் வீட்டு உபயோகத்திற்கான பயன்பாட்டு கட்டண அளவிலேயே வசூலிக்கப்படும்

6.2 சிறந்த நிர்வாகத்திற்கு பொறுப்புணர்வும், வெளிப்படைத் தன்மையும் முக்கிய அம்சங்களாகும். தன்னார்வக் குழுக்கள் இத்தகைய நிர்வாகத் திறன் கொண்ட முன்னோடி அமைப்புகளாக விளங்க வேண்டும். தன்னார்வக் குழுக்களின் சிறப்பான நிர்வாகத் திறமைகளை அரசு பாராட்டி பிரபலப் படுத்தும்.

6.3 அரசு தன்னார்வக் அமைப்புகளுக்கு தேவையான நிதி உதவியும், தொழில்நுட்ப உதவியும் வழங்கும்.

6.4 வளர்ச்சித் திட்டங்களில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு நிறுவன ரீதியான, தொழில்நுட்ப ரீதியான அல்லது சமூக ரீதியான அணுகுமுறைகளைக் கண்டறிவது தன்னார்வ அமைப்புகளின் முக்கிய அம்சமாகும். இத்தகைய புதிய அணுகுமுறைகளை அரசு அங்கீகரித்து உற்சாகப் படுத்தும். இத்தகைய போக்கு அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதோடு, வளர்ச்சித் திட்டங்களில் முழுமையாகப் பங்கேற்கும் உரிமையையும் பெற்றுத் தரும்

6.5 அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்த தகவல்கள் தன்னார்வக் குழுக்களுக்கு எளிதில் எட்டுமபடியாக இருக்கும். அரசுத்துறையின் இணைய தளங்கள் முக்கியத் தகவல்களையும், திட்டநிதி ஒதுக்கீடுகளையும் தெளிவாகத் தெரிவிக்கும் வகையில் மாற்றியமைக்கப்படும். மாநில அரசும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து சமூகத்தின் கடைநிலையில் உள்ளவர்களுக்கு நேரடித் தொடர்பும், குறைபாடுகள் இருப்பின் அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகளையும் உருவாக்கும். இது தகவல் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவதைப் போன்ற அணுகுமுறைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

6.6 அரசு தன்னார்வ அமைப்புகளின் பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு உதவிகளை வழங்கும்.